| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| சா.சேதுராமவர்மா, | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | அலுவலர்கள் , |
| சென்னை – 600 006. | |

**ந.க.எண். 020999 / எச்1/2022** **நாள். 06.01.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - 2022 - 2023-ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – இடைநின்ற மாணவர்கள் தனித்தேர்வராக விண்ணப்பித்துள்ளமை - பள்ளி மாணவராக தேர்வெழுதுதல் - தொடர்பாக.

------

2021 – 2022 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை பள்ளி மாணவராக, செய்முறைத் தேர்வு உள்ள பாடத் தொகுதிகளில் பயின்று தேர்வெழுதிய மாணவர்களுள் சிலர், தொடர்ந்து மேல்நிலை இரண்டாமாண்டு பயிலாமல் மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநிறுத்தம் செய்துள்ளதாக தெரிவித்து பெயர் பட்டியலில் இருந்து தலைமையாசிரியர்களால் நீக்கம் செய்யப்பட்டது. ஆனால் அவர்களில் சிலர் (இணைக்கப்பட்டுள்ள பட்டியலின் படி) தற்போது , மார்ச்/ ஏப்ரல் - 2023 நடைபெறவிருக்கும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கு அவர்கள் பயின்ற பாடத் தொகுதியிலேயே தனித்தேர்வராக விண்ணப்பித்துள்ளனர். இந்நிகழ்வு மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் உள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. மேலும் மாணவர்களால் மாற்றுச் சான்றிதழ் கோரப்படாமல் பள்ளி அளவிலேயே வழங்கப்பட்டுள்ளதாக கருத வேண்டியுள்ளது.

செய்முறைத் தேர்வுகள் உள்ள பாடத் தொகுதிகளில் உள்ள பாடங்களுக்கு தனித் தேர்வராக விண்ணப்பிக்க இயலாது என்பதால் மாணவர்களின் நலன் கருதி மற்றும் படிப்பின் மேல் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு, அவர்கள் இடைநின்ற பள்ளிகளிலேயே சேர்க்கை செய்து, அப்பள்ளி மாணவராகவே நடைபெறவிருக்கும் மார்ச்/ ஏப்ரல் - 2023 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கான கருத்தியல் மற்றும் செய்முறை தேர்வுகளில் பங்கேற்க வழிவகை செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

விண்ணப்பித்த மாணாக்கர்களின் பட்டியல்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நகல்:**

1. பள்ளிக் கல்வி ஆணையர் அவர்கள் ( முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கும் பொருட்டு பணிவுடன் அனுப்பப்படுகிறது).
2. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

- தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்